பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 பங்குனி 11 ஞாயிற்றுக்கிழமை (24-03-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 119

# வந்தாறுமூலையில் புலிகளின் அதிரடிக்கு 40க்கும் அதிகமான இராணுவத்தினர் பலி!

## இருபது சிப்பாய்கள் படுகாயம்

கொழும்பு, மார்ச் 24

**வந்தாறுமூலைப் பகுதியில் நேற்று பிற்பகல் 3.00 மணியளவில் ரோந்து சென்ற ஸ்ரீலங்கா இராணுவத்தினரை வழிமறித்து விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் நாற்பதுக்கும் அதிகமான படையினர் உயிரிழந்தனர்; இருபது சிப்பாய்கள் வரை படுகாயமடைந்தனர்.**

ஆஸ்திரேலிய வானொலி நேற்றிரவு இத்தகவலை வெளியிட்டது.

சித்தாண்டி இராணுவ முகாமிலிருந்து மட்டக்களப்புக்கு 15 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள வந்தாறுமூலைப் பகுதிக்கு ரோந்து சென்ற படையணியே புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி சிதறியது.

சுமார் இருநூறு பேரைக் கொண்ட புலிகளின் அணி இத்தாக்குதலை நடத்தியதாகவும் —

சுமார் ஒரு மணி நேரம் அப்பகுதியில் கடும் சண்டை நடைபெற்றதாகவும் —

சண்டை வெடித்ததை அடுத்து 'எம். ஐ. 24' ரக ஹெலிக்கொப்டர்கள் இரண்டின் மூலம் அப்பகுதியில் விமானப்படையினர் தாக்குதல் நடத்தியதாகவும் —

பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

மட்டக்களப்பு சந்திவெளிப் பகுதியில் ஸ்ரீலங்கா படையினர் நேற்று விசேட இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நேருக்கு நேர் நடந்த சண்டை

கொழும்பு, மார்ச் 24

நேற்று பிற்பகல் வந்தாறுமூலையில் இடம்பெற்ற சண்டையின் போது விடுதலைப் புலிகள் அரச துருப்புகளை நெருக்கமாக எதிர்கொண்டு நேருக்கு நேர்(Hand to hand fight) சமர் புரிந்ததாக ஆஸ்ரேலிய வானொலி அறிவித்தது.

(உ-3)

## ஒரு முழுப் பிளட்டூனே கூண்டோடு அழிந்தது!

புதுடில்லி, மார்ச் 24

வந்தாறுமூலைத் தாக்குதலில் இராணுவத்தின் ஒரு பிளட்டூன் அணி அப்படியே அழிந்ததாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி தூரதர்ஷன் நேற்றிரவு அறிவித்தது.

ஒரு பிளாட்டூனின் 40 துருப்புகளில் 28 பேர் சம்பவம் நடந்த இடத்திலேயே புலிகளின் தாக்குதலுக்கு இரையாகினர் என்றும்—

படுகாயமடைந்த 12 சிப்பாய்கள் பின்னர் சிகிச்சை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சி, வடமராட்சி மீது அதிகாலை ஷெல் வீச்சு

பலாலியில் இருந்தும் வலிகாமம் பகுதியில் இருந்தும் படையினர் தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகள் மீது நேற்று பல தடவைகள் ஷெல் வீச்சுக்களை நடத்தினர்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் தென்மராட்சிப் பகுதிக் குடியிருப்புக்கள் மீது ஷெல் வீச்சுக்கள் நடத்தப்பட்டன.

புத்தூர் கிழக்கு வாதரவத்தையில் இரண்டு ஷெல்களும், மட்டுவில் வடக்குப் பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் குடியிருப்பு ஒன்றுக்கு அருகில், இளைப்பாறிய அதிபர் ஒருவரது வளவில் ஒரு ஷெல்லும் வீழ்ந்தன.

வடமராட்சி மீது நேற்று அதிகாலை, காலை, மாலை வேளைகளில் ஷெல்கள் ஏவப்பட்டன.

தொண்டமானாறு, வல்வெட்டித்துறை கரையோரப் பகுதிகளில் அவை வீழ்ந்து வெடித்தன.

(அ-13-51-173-15-36)

## வடமராட்சியைப் பிடிக்க பாரிய ராணுவ நடவடிக்கை!

### ஏற்பாடுகள் பூர்த்தியாம்

கொழும்பு, மார்ச் 24

வடமராட்சியை விடுவிப்பதற்கு மிக விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கும் பாரிய இராணுவ நடவடிக்கைக்கான ஏற்பாடுகள் அனைத்தும் தயார்.

இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி ''திவயின'' பத்திரிகை இச்செய்தியை வெளியிட்டுள்ளது.

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, தொண்டமானாறு ஆகிய பகுதிகளில் இந்த நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கப்படும்.

''சூரியப்பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையின் பின்னர் கிழக்கிற்கு கொண்டு செல்லப்பட்ட படையினர் தற்போது இந்த நடவடிக்கைக்காக மீண்டும் வடக்கே அழைத்து வரப்பட்டுள்ளனர். இராணுவத்தின் கொமாண்டோ படைப் பிரிவினரும், விசேட படைப் பிரிவுகளும் தற்போது வடபகுதியில் தங்கியுள்ளன.

— இவ்வாறு அப்பத்திரிகை தெரிவித்தது.

புத்தாண்டுக்கு முன் வடபகுதி விடுவிக்கப்படும் என பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்திருப்பதையும் அப்பத்திரிகை நினைவூட்டியது.

(உ-10)

## உயிரிழந்த படையினரின் எண்ணிக்கை 40இலும் கூட?

வந்தாறுமூலைத் தாக்குதலில் உயிரிழந்த படையினரின் எண்ணிக்கை 40 இலும் விட மிக அதிகம் என்று ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிப்பதாக செய்தி ஏஜென்ஸிகள் நேற்றிரவு அறிவித்தன.

''முதலில் கிடைத்த தகவல்கள் 28 படையினர் உயிரிழந்ததாகத் தெரிவித்தாலும் உண்மை நிலை தெளிவாகத் தெரியவரவில்லை.

''இன்னும் அதிகமானோர் உயிரிழந்திருப்பது பற்றிய தகவல் நேரம் செல்லச் செல்லக் கிடைக்கலாம் என எதிர்பார்க்க முடியும்.''— இவ்வாறு வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்றின் கொழும்புச் செய்தியாளர் குறிப்பிட்டார்.

(உ-3-6-7)

## சமரின் இடையில் சிக்கி முஸ்லீம் பயணி மரணம்

வந்தாறுமூலையில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற சண்டையில் துப்பாக்கிச் சூடுகளுக்கு இடையில் சிக்கி பஸ் ஒன்றில் வந்த பயணி ஒருவர் உயிரிழந்தார் என்றும்—

அந்த பஸ்ஸின் சாரதி உட்பட 9 பயணிகள் காயமுற்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

புத்தளத்தில் நடைபெற்ற அகில உலக தப்லிக் இஜ்திமா மாநாட்டில் பங்குபற்றிவிட்டு கிழக்கிலங்கைக்குத் திரும்பிக் கொண்டிருந்த முஸ்லிம் மக்களின் பஸ்ஸே துப்பாக்கிச் சூடுகளுக்கு இடையே சிக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## விமானப் படையிடம் பறக்கும் டாங்கிகளாம்!

சாவகச்சேரி, மார்ச் 24

புலிகளின் முகாம்களை அழிப்பதற்கு ஸ்ரீலங்கா விமானப் படையினர் முதன் முறையாக ''மில் 24 ஹின்த்'' அல்லது ''பறக்கும் டாங்கி'' என்றழைக்கப்படும் தாக்குதல் ஹெலிக்கொப்டர்களைப் பயன்படுத்த இருப்பாக 'திவயின' சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதுவரை 'பெல்' ரக ஹெலிகளையே விமானப் படையினர் தாக்குதலுக்கு பயன்படுத்தி வந்தனர். தற்போது கனரக ஆயுதங்கள் பொருத்தப்பட்ட 'பறக்கும் டாங்கிகள்' உக்ரைனிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருக்கின்றன.

(உ-10)

## 'ஐரிஷ்மோனா' மாலுமிகள் உண்ணாவிரதமாம்

விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ''ஐரிஷ் மோனா'' கப்பலின் மாலுமிகள் தமது நிலை தொடர்பாக தென்னிலங்கையின் கவனத்தை ஈர்ப்பதற்காக உண்ணாவிரதம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

மாலுமிகளின் உறவினர்கள் இத்தகவலை வெளியிட்டதாக கொழும்பில் செய்தி வட்டாரங்கள் நேற்று அறிவித்தன.

கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் மூன்று சிங்களவர், இரு தமிழர் உட்பட ஐந்து மாலுமிகள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

## எண்ணெய்க் குத அழிப்பு

### காப்புறுதி நஷ்டஈடு அரசுக்குக் கிடைக்காது

கொழும்பு, மார்ச் 24

அதிரடித் தாக்குதல் மூலம் அழிக்கப்பட்ட கொலன்னாவை, ஊறுகொடவத்த எண்ணெய்க் குதங்களுக்கான காப்புறுதி நஷ்டஈட்டுக் கொடுப்பனவை வழங்க முடியாது என்று அவற்றைக் காப்புறுதி செய்த வெளிநாட்டுக் காப்புறுதி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேற்படி குதங்களுக்கான காப்புறுதி ஒப்பந்தத்தில், தீவிரவாதிகளின் தாக்குதல் தொடர்பான காப்புறுதி விடயம் உள்ளடக்கப்படவில்லை என்று தெரிவித்தே காப்புறுதி நஷ்டஈட்டை வழங்க அந்த நிறுவனம் மறுத்திருக்கின்றது.

இத்தாக்குதலில் இரண்டு இடங்களிலும் இருந்த 15 குதங்களும் முற்றாக அழிந்ததில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு 150 கோடி ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

'முதல் ஓர் எண்ணெய்க் குதம் மட்டுமே தீவிரவாதிகளின் தாக்குதலால் அழிக்கப்பட்டது. அதில் ஏற்பட்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தீர்வுக்கு அமெரிக்க உதவி: 5 தமிழ் கட்சிகள் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 24

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை தீர்க்கக் கூடிய வகையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை காண்பதற்கு அமெரிக்க அரசு உதவ வேண்டும்.

ஐந்து தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு கொழும்பில் உள்ள அமெரிக்க தூதுவர் பீற்றர் பேர்லியை நேற்று முன்தினம் சந்தித்து இவ்வாறு கேட்டுக் கொண்டது.

ஈ. பி. ஆர். எல். எவ்., ஈ. பி. டி. பி. புளொட், ரெலோ, ஈரோஸ் ஆகிய கட்சிகளே இக்கோரிக்கையை முன்வைத்தன.

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தை துண்டாடுவதற்கு திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் ஐந்து கட்சிப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

(உ-3-6)

## மணலாறிலிருந்து வவுனியா வரை படைகளுக்கு பாதுகாப்பற்ற வலயம்!

கொழும்பு, மார்ச் 24

மணலாறிலிருந்து வவுனியா வரையான பிரதேசத்தில் போதிய முன்னணி காவலரண்கள் இல்லாததால் அப்பிரதேசத்தின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் நிலவுவதாக ''திவயின'' சிங்கள நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.

வவுனியாவிலுள்ள மஹா கச்சிக்குடியவிலிருந்து பதவியா வாவி வரையுள்ள பகுதியிலேயே இந்தப் பாதுகாப்பற்ற வலயம் அமைந்துள்ளது எனவும் —

கெப்பிற்றிக்கொலாவை, பதவியா போன்ற இடங்களுக்கு புலிகளால் சுலபமாக ஊடுருவ முடிகிறது எனவும் —

தெரியவருவதாக அப்பத்திரிகை குறிப்பிட்டது.

மணலாற்றுப் பிரதேசத்தின் பாதுகாப்புக்காக புதிய இடங்களை வகுத்த பிரிகேடியர் ஜனக பெரேரா இந்தப் பாதுகாப்பற்ற வலயம் குறித்து மேலிடத்தின் அவதானத்தைப் பலமுறை ஈர்த்த போதிலும் பொருத்தமான நடவடிக்கைகள் எவையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனவும் —

விரைவில் யாழ். குடாநாட்டில் இராணுவம் மேற்கொள்ளவிருக்கும் பாரிய இராணுவ நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகள் பாதுகாப்பற்ற வவுனியா - மணலாற்றுப் பிரதேசத்தில் பாரிய தாக்குதல்களை மேற்கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் —

இராணுவ அதிகாரி ஒருவர் குறிப்பிட்டதாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

### மின்னலுக்கு ஊர்காவலர் பலி

மதவாச்சியில் குடாகம என்ற இடத்தில் மின்னல் தாக்கி ஊர்காவல்படை உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார்.

(உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இயந்திர உராய்வு நீக்கியாகப் பாவிக்க உகந்த No 1 Castor Oil உம், 60 போத்தல் கொள்ளளவும் கொண்ட 'ரப்'புடன் கூடிய சில்வர் ரம் என்பன விற்பனைக்குண்டு. மங்களபதி வைத்தியநிலையம், கல்வயல்-நுணாவில் வீதி, கல்வயல், சாவகச்சேரி. (41083)

வீட்டுப் பாவனைப் பொருள்கள், மரத் தளபாடம், அலுமாரி, குசன் செற்றி உட்பட தையல் மெசின் - சிங்கர், தொலைக்காட்சிப் பெட்டி நாஷனல், T. V. S. மோட்டார் சைக்கிள், Fan. திருமதி அ. வாமதேவா, மே/பா ச. கார்த்திகேசு, கோவிலாக் கண்டி, கைதடி. (41060)

3½ பரப்பு காணி, சகல வசதிகளுடனும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளும் மற்றைய விவரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: பா. மகேந்திரராசா, இல. 59, கண்டி வீதி, சாவகச்சேரி. (மக்கள் வங்கிக்கு அருகில்). (41084)

## தேவை

ஆங்கிலம், சிங்களம், தமிழில் மொழிபெயர்க்கக்கூடியவர்கள் தேவை. தகைமைகளுடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி, தென்றல், இலக்கம் 90, யாழ். வீதி, கிளிநொச்சி. (40478)

நல்ல நிலையில் உள்ள தனிநபர் கட்டில்கள் (Single Beds), மெத்தைகள் தேவை. தொடர்பு: K. K. S. கிளினிக் (தனி) வைத்திய ஆலோசனை நிலையம், வல்லிபுர கோவில் வீதி, மந்திகை. (41193)

## காணவில்லை

22 - 3 - 96 மாலை ஒரு பிளாஸ்டிக் உறையுடன் காற்சட்டை, கத்தரிக்கோல் ஆகியன சங்கத்தானைக்கும், மடத்தடிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ் காணும் முகவரியில் ஒப்படைக்கவும். சுகுமார் சைக்கில் வேக்ஸ், 13, கச்சாய் வீதி, சாவகச்சேரி. (41087)

## புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான வெற்றிக்கனி தொகுப்பு (இதழ் 1 — இதழ் 6), இதழ் 7 — இதழ் 8 விற்பனையாகிறது. பூபால சிங்கம் புத்தகசாலை, இல. 8, நவீன சந்தை மேல்மாடி (உட்புறம்), சாவகச்சேரி. (41088)

## தவறிவிட்டது

14ஆம் திகதி வியாழன் 12 மணியளவில் 1,000 ரூபா நோட்டுகள் மூன்று நெல்லியடிச் சந்தையில் அல்லது மாலுசந்தி வரையான தெருவில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஒரு நோட்டை எடுத்துக் கொண்டு மிகுதி இரண்டையும் பருத்தித்துறை தபாலதிபரிடம் ஒப்படைக்கவும். (41195)

620184390V இலக்க அடையாள அட்டையும், சாம்பல் கலர் டயறியும் 22-3-96இல் நுணாவில் சந்திக்கும், யாக்கரை பிள்ளையார் கோவிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தந்துதவவும். 'திலகவாசா', கரணவாய் தெற்கு, கரவெட்டி. (41210)

## COMPUTER CLASS

பிரத்தியேக கணனி வகுப்புக்கள்: (Basic, Pascal, dBase III+, Lotus 123, C++) தென்மராட்சி மாணவர்களின் வசதி கருதி விசேட வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. தொடர்பு: K. Vignesh, Talent Institute, கோவில் சந்தை, கரவெட்டி. (41197)

## RADIO & ELECTRONICS

மேற்படி பயிற்சி நெறி செயல்முறை விளக்கங்களுடன் (றேடியோ, ரீ. வி., வீடியோ டெக் உட்பட) 28-3-96 காலை 9 மணிக்கு ஆரம்பமாகிறது. விவரங்களுக்கு: N. சற்குணராசா (ஆசிரியர் North Ceylon Tech-enical Institute), மொடேர்ன் ரியூட்டரி, தம்பசிட்டி வீதி, 1ஆம் கட்டையடி, பருத்தித்துறை (நஞ்சன் பூங்காவிற்கு அருகில்). (40369)

# வகுப்பு

விரைவில் நடைபெறவுள்ள விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவுப் போட்டிப் பரீட்சைக்கான வகுப்பு ஆரம்பமாகவுள்ளது.

**பாடம்: பொதுஅறிவு**

(விளையாட்டு விடயங்களுக்கு முதன்மையுடன்)

ஆசிரியர்: வே. தபேந்திரன் B. Com.

காலம் : 26-03-96, மாலை 4.30 மணி

இடம் : வடமராட்சி, அல்வாய் வடக்கு, சிறிலங்கா வித்தியாசாலை அருகில்.

ஏற்பாடு

**இளங்கோ சனசமூக நிலையம்**

அல்வாய் வடக்கு. (40373)

யாழ். நகரில் இயங்கிய

# எடிசன் அக்கடமி

வடமராட்சி - தென்மராட்சியில்

ஆண்டு 6 முதல் **O/L** வரை

யாழ். நகரின் அதி சிறந்த ஆசிரியர்களின் புதிய ஒருங்கிணைப்பில் ஆரம்பம்

**கணிதம்: திரு. B. P. பாஸ்கரன்**

★ ஆரம்பிக்கும் இடம், அனுமதி பெறும் திகதி என்பன பின்னர் அறிவிக்கப்படும்.

ஆரம்பம்: **03 - 04 - 1996** (சி-4133)

# கலைச்செல்வி கல்வி நிலையம்

மீசாலை

ஆண்டு 6, 7, 8, 9, 10, 11 வகுப்புக்கள் 03-04-96 முதல் ஆரம்பமாகின்றன

★ உங்கள் அனுமதிகளை 25.03.96 முதல் 01.04.96 வரை பெற்றுக்கொள்ளவும்.

(41084) — நிர்வாகி.

JAFFNA

# NEW SCIENCE ACADEMY

அண்ணா கோப்பி அருகாமை ஒழுங்கை, ஐயா கடையடி மீசாலை — சாவகச்சேரி.

**A/L 97, 96, 95** (பரீட்சைக்கு தோற்றியவர்கட்குரிய மீட்டல்)

★ கணித, விஞ்ஞானப் பிரிவுகள் ★

★ SPECIAL ENGLISH COURSE ★

★ எமது வழமையான ஆசிரியர் குழு ★

ஆரம்பம்: **3-4-96** பிற்பகல் 3.00 மணி

அனுமதிகளை 25ஆம் திகதியிலிருந்து பெற்றுக் கொள்ளவும்.

(சி/4134) — நிர்வாகி

உ

சிவமயம்

அருள்மிகு

## கிளிநொச்சி கந்தசாமி கோவில்

சிவகாமசுந்தரி சமேத நடராஜப்பெருமான்

# நூதனப் பிரதிஷ்டா விஞ்ஞாபனம்

நிகழும் மங்களகரமான யுவ வருடம் பங்குனி மாதம் 12 ஆம் திகதி (25 - 03 - 96) திங்கட்கிழமை காலை 6-30 மணிமுதல் 7-25 மணிவரையுள்ள சுபவேளையில் புதிதாக உருவாக்கப்பெற்ற நடராஜப்பெருமான் விக்கிரகம் பிரதிஷ்டை செய்து வைக்கப்படும்.

**24 - 03 - 96** பிற்பகல் 3மணிக்குப் பூர்வாங்கக் கிரிகைகள், கண் திறத்தல் ஆகியன நடைபெறும்.

**25 - 03 - 96** திங்கட்கிழமை காலை 5-30 மணிக்கு யாக பூசைகள் தீபாராதனை நடைபெற்றுக் காலை 6-30 மணி முதல் 7-25 மணிவரையுள்ள சுபவேளையில் பிரதிஷ்டா அபிஷேகம் நடைபெறும்.

மாலை 5-30 மணிக்கு கம்பன் கழக உறுப்பினர் திரு. ஆறு திருமுருகன் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

**02 - 04 - 96** செவ்வாய்க்கிழமை பகல் சகஸ்ர சங்காபிஷேகம் (1008) நடைபெறும்.

அடியார்கள் கும்பாபிஷேகத்திலும், ஏனைய கிரிகைளிலும் கலந்து நடராஜமூர்த்தியின் பேரருளைப் பெறுமாறு வேண்டுகின்றோம். கும்பாபிஷேக தினத்தன்று இரவு நடராஜப்பெருமான் பூந்தண்டிகையில் வீதி வலம் வருதல் இனிது நிகழும்.

விக்கிரக வேலை: சு. பாஸ்கரன்

ஆலய அமைப்பு: நாகமுத்து

ஆலய பரிபாலன சபை.

கந்தசாமி கோவில், கிளிநொச்சி. (40483)

# தபால் மூலம் கல்வி

3ஆம், 4ஆம், 5ஆம், 6ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம், 10 ஆம் ஆண்டுகள், **O/L**

**A/L** கணித, விஞ்ஞான, கலை, வர்த்தக பிரிவுகள்

எல்லாப் பாடங்களும்

அலகு ரீதியான பயிற்சிகள் — தபால் மூலம்

★ எம்முடன் தொடர்பு கொள்ளும் ஒவ்வொருவருக்கும் 1 - 4 - 96 முதல் அனுப்பப்படும் பயிற்சி வினாத்தாள்களுக்கு விடையளித்து அனுப்பி வைத்தால், அவற்றை திருத்தி விடைகளுடன் உரியவர்களுக்கு மீள அனுப்பி வைக்கப்படும்.

★ தொடர்பு வசதிக்காக—தற்சமயம் சாவகச்சேரியில் இயங்கும் யாழ்ப்பாண பிரதம தபாலகத்தில்- தபால் பெட்டி.

★ 2/- முத்திரை ஒட்டப்பட்ட சுய முகவரியுடனான கடித உறையை அனுப்பி மேலதிக விவரங்களை— இலவசமாகப் பெறலாம்.

எமது முகவரி:

**BOND**

த. பெட்டி: 140, யாழ்ப்பாணம். (40374)

## ஆண்டு 5 - புலமைப்பரிசில் '96

பயிற்சி - 02 (விடைகளுடன்)

25-03-96 முதல் எல்லா புத்தகசாலையிலும் பெறலாம்.

★ பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்களுக்கு, விசேட கழிவு வழங்கப்படும்.

விவரங்களுக்கு:

**BOND**

த. பெட்டி: 140, யாழ்ப்பாணம். (40375)

# தொடர்புகொள்ளவும்

யாழ்ப்பாணம், ஆரியகுளம் புதிய பஸ் தரிப்பு நிலையத்திற்கு முன்பாக வசித்த செல்வி. மஞ்சுளா கடிதம் மூலம்/நேரில் தொடர்பு கொள்ளவும்:

நிரந்தர முகவரி: கு. புஸ்பராணி கனனை, புலோலி மேற்கு.

தற்காலிக முகவரி: கு. புஸ்பராணி இல, 668, கொத்தம்பியாகுளம், செல்வன் வீதி, துணுக்காய். (41196)

அருள்மிகு

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

சாவகச்சேரி

அன்புடையீர்!

அடியார்களின் வசதியை முன்னிட்டு மேற்படி தேவஸ்தானத்தில் தினசரி நடைபெறும் பூஜை நேரமும் ஆலயத்திருக்கதவு திறந்திருக்கும் நேரமும்.

| | | |
|---|---|---|
| தினசரி — காலை சந்திப்பூஜை | — | 8-00 மணி |
| உச்சிக்காலம் | — | 10-30 மணி |
| சாயரட்சை (மாலை) | — | 5-00 மணி |

திங்கள், செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் உச்சிக்காலப் பூசை 12-00 மணிக்கும், செவ்வாய் சாயரட்சை பூசை 3-30க்கும் நடைபெறும்.

பங்குனித்திங்களை முன்னிட்டு அதிகாலை 5-00 விருந்து மாலை 7-00 வரை அடியார்கள் பொங்கி வழிபட வசதியாக ஆலயத் திருக்கதவு திறந்திருக்கும்.

குறிப்பு:- தேவஸ்தானத்தில் திருமண வைபவம் நடத்த வசதிகள் செய்துகொடுக்கப்படும்.

நன்றி

தர்மகர்த்தா

(41077) ப. மகாகணபதி சர்மா

# மொழிக் கல்வி நிலையம்

டச்சு வீதி, சாவகச்சேரி.

(ஐங்கரன் வெதுப்பகத்திற்கு அருகில்)

SPOKEN ENGLISH WITH GRAMMAR
SPOKEN SINHALA WITH GRAMMAR
GENERAL ENGLISH

by

N. RAJARATNAM, Retired Clerk GCS I and Trilingual Sworn Translator

Accounts for Clerical Officers Employed in Govt. Departments

BY N. S. R. NATHAN

ஆரம்பம்: **01-04-1996**

★ அரச, வங்கி அலுவலர்களுக்கு தனியான வகுப்புக்கள் நடைபெறும்.

பதிவு: 25 - 03 - 1996 தொடக்கம்

அலுவலக நேரம்: பி.ப. 4-00 தொடக்கம் 6-00 வரை (41090)

# ST. PATRICK'S COLLEGE

★ க. பொ. த (சா. த) 95 பொதுத்தேர்வுக்கு விண்ணப்பித்தோர் 25 - 03 - 96 திங்கள் காலை 9 மணிக்கு வரணி மத்திய மகாவித்தியாலயத்திற்கு தவறாது சமுகம் தரவும்.

★ ஆண்டு 1—5 வரையிலான மாணவர்கள், இப்போது தற்காலிகமாக சேர்ந்திருக்கும் பாடசாலையின் பெயரையும், அதன் முகவரியையும் பின்வரும் முகவரிக்கு உடனடியாக அனுப்பி வைக்கவும்.

அதிபர்

சென் பற்றிக்ஸ் கல்லூரி,

மே/பா பங்குத் தந்தை,

புனித நீக்கிலாஸ் ஆலயம்,

மிருசுவில்.

★ எமது கல்லூரிக்கு புதிதாக அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் 96 ஆம் ஆண்டில் தாம் படிக்க விண்ணப்பித்த வகுப்பு என்னவென்பதையும் தற்போது வசிக்கும் விலாசத்தையும் மேலே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு உடனடியாக அனுப்பி வைக்கவும்.

அதிபர்

(41214) யா/புனித பத்திரிசியார் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தற்காப்பு அவசியம்

தமிழர் பிரதேசங்களில், இதுவரை தான் ஆக்கிரமிக்காத பகுதிகளில், மிகப் பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்றைத் தொடுப்பதற்கு அரசாங்கம் தயாராகி வருகிறது.

அதன் பொருட்டு அரசு அவசர அவசரமாக இராணுவத்துக்கு பத்தாயிரம் பேரைத் திரட்டுகிறது. கடற்படைக்கும் அவசரமாகத் துருப்புக்களைச் சேர்க்கிறது. நவீன ஆயுதங்களையும், விமானங்கள், கப்பல்கள், படகுகள், டாங்கிகள் என்று ஆயுத தளபாடங்களையும் வாங்கிக் குவிக்கிறது.

அந்நிய நாடு ஒன்றின் ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கு படைபலத்தையும், ஆட்பலத்தையும் அதிகரிப்பது போலப் பெருக்குகிறது. நாட்டுப் பற்றுள்ள இளைஞர்களை இராணுவத்தில் சேருமாறு அழைப்பு விடுவது வேற்று நாடு ஒன்றின் மீது படையெடுக்க தயாராகும்தொனியிலேயே அமைந்திருக்கிறது.

ஸ்ரீலங்கா இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் வெல்ல முடியாத ஒன்று என்பது நிறுவப்பட்ட விடயம்.

அரசு வலிகாமத்தின் மீது நடத்திய படையெடுப்பு அரசியல் ரீதியாகப் பெருந் தோல்வியானது. இராணுவ ரீதியான வெற்றி கூட இப்போது கரையத் தொடங்கி விட்டது.

இதனால் ஏற்பட்ட அவமானமும், விரக்தியும் அரசுக்கு ஒருவகை வெறித்தனத்தை உண்டாக்கி உள்ளன. ஆகையால் எதிர்வரும் தாக்குதல் இயன்றவரை பெரும் எண்ணிக்கையான தமிழர்களை அழித்தொழிக்கும் நோக்குடனயே திட்டமிடப்படும் என்பதனை எவரும் எதிர்பார்க்கலாம். அதற்கான ஆயத்த நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டுள்ளதும் வெளிப்படையாகவும் தெளிவாகவும் தெரிகிறது.

விடுதலைப் புலிகளை அழிக்கிறோம் என்று கணக்குக் காட்டிக் கொண்டும், பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்று பட்டம் சூட்டிப் பிரசாரம் செய்து கொண்டும். அரசு, தமிழ் மக்களை அழித்தும், அவர்களது வாழ்வை அவலப்படுத்தியும் வருவது ஒன்றும் புதியதல்ல.

ஆனால் இம்முறை நடக்கப்போகும் தாக்குதல்கள் அரசுக்கும், படைகளுக்கும் உண்டாகியுள்ள வெறித்தனம், வெப்பியாசாரம், ஆவேசம், ஆக்ரோசம் எல்லாம் ஒன்று திரண்ட வடிவுடைய கொடுந் தாக்குதல்களாக அமையும் என்று எதிர்பார்க்க வேண்டும். அரச அதர்மத்தின் பாகை மிகப் பெரிய அளவில் அகன்று விரியும்.

இடம்பெயர்ந்த மக்கள் தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் மிக நெருக்கமாக வாழ்வது அரசின் நோக்கத்தை இலகுவாக அடைவதற்கு வாய்ப்பளிக்கும் சாத்தியமும் உண்டு.

எனவே, படையினர் வடக்கில் தூரத்தே நின்று நடத்தப்போகும் கொடூரத்தனமான தாக்குதல்களினால் உண்டாகக் கூடிய உயிரிழப்புகளை, பாதிப்புகளை குறைத்து, தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்வதில் மக்கள் எல்லோரும் அக்கறையுடனும், விழிப்பாகவும் செயற்படவேண்டும். தற்காப்பு அவசியமும், அவசரமானதும் ஆகும்.

# வன்னிக்கு அனுப்பப்படும் உணவு போதுமான அளவில் இல்லை

## ஐ. நா. அமைப்பு அரசுக்குக் கடிதம்

கொழும்பு, மார்ச் 24

யாழ். மாவட்டத்தில் இருந்து யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வன்னிக்கு வந்துள்ள தமிழர்களுக்கு வழங்கப்படும் நியாய விலை உணவுப் பொருள்கள் போதுமானவை அல்ல என்றும்—

வன்னிக்கு அனுப்பும் உணவுப் பொருள்களின் அளவை உடன் உயர்த்தவேண்டும் என்றும்—

வன்னிக்கு வந்து திரும்பிய ஐ. நா. உணவு, விவசாயக் குழு அரசுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளதாக ''வெரித்தாஸ்'' வானொலி தெரிவித்தது.

இக்கடிதத்துக்கு அரசு எந்த வித பதிலையும் வெளியிடவில்லை என்றும் அவ்வானொலி மேலும் தெரிவித்தது.

உலக உணவு ஸ்தாபனத்தின் பிரதிநிதி திரு. கைலைஸாம் மற்றும் ஐ. நா. உணவுத் திட்டப் பிரதிநிதி ஒருவரும் வார ஆரம்பத்தில் கிளிநொச்சி மாவட்டத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

கிளிநொச்சியில் உள்ள பல்வேறு திணைக்களங்களின் அதிகாரிகளையும் இவர்கள் சந்தித்து, இடம்பெயர்ந்த மக்களின் உணவு நிலை குறித்து ஆராய்ந்தனர்.

உணவுப் பங்கீடு, உணவுப் பற்றாக்குறை, களஞ்சிய வசதி போன்ற விடயங்கள் குறித்து இவர்கள் வன்னியில் பலதரப்பட்டவர்களுடன் பேச்சு நடத்தி, நிலைமையைக் கண்டறிந்தனர். (உ-3-7-124)

## வீரச்சாவு

நேற்று முன்தினம் வலிகாமம் கொழும்புத்துறைப் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரவேங்கை சங்கிலியன் (கோமேஸ்வரன் கஜவசந்தன் — ஈவினை தெற்கு, புன்னாலைக்கட்டுவன்) என்ற போராளிவீரச்சாவடைந்தார்

இந்த மாவீரரின் பெற்றோர் அல்லது உரித்துடையோர் அண்மையில் உள்ள மாவீரர் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (உ-7)

## உணவுப் பொருள்களை தருக!

# ஐ.நாவிடம் அவசர உதவி கோருகிறது ஸ்ரீலங்கா!

கொழும்பு, மார்ச் 24

இனப்போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீலங்காவுக்கு அவசரமாக உணவுப்பொருள்களை வழங்குவதற்கான உதவியை ஒன்று திரட்டி பெற்றுத் தருமாறு ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டத்தை ஸ்ரீலங்கா அரசு கேட்டிருக்கின்றது.

உலக உணவுத் திட்டத்தின் அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

கடந்த வருடம் மழை பெய்யாததால் பெரும் போக நெல் விளைச்சல் வீழ்ச்சி கண்டிருப்பதால் உணவு நெருக்கடி தோன்றலாம் என்று ஸ்ரீலங்கா அரசு அஞ்சுகிறது.

போரினால் அகதிகளாகியிருக்கும் பத்து லட்சத்துக்கும் அதிகமான மக்களுக்கு அரசு உணவுப் பொருள்களை நிவாரணமாக வழங்கி வருகின்றது.

யுத்தமும், வரட்சியும் என்றுமில்லாத நெருக்கடிகளை அரசுக்கு ஏற்படுத்தியுள்ளன. எனவே உணவுப் பொருள்களை பெற்றுக்கொள்வதற்கு— சர்வதேச— அவசர உதவிகளைத் திரட்டித்தாருங்கள். —இவ்வாறு அரசு கேட்டுள்ளதாம். (உ-3)

# மட்டக்களப்பில் மற்றொரு மின்மாற்றி தகர்ப்பு!

கொழும்பு, மார்ச் 24

மட்டக்களப்பில் காங்கேயனோடை மின் மாற்றி கடந்த வியாழனன்று இரவு இனந்தெரியாதோரால் குண்டு வீசிச் சேதமாக்கப்பட்டது. குண்டு வெடித்த சத்தம் பல மைல் தூரத்துக்கு கேட்டது.

கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தின் பின்னர் 56 மின் மாற்றிகள் இப்பகுதியில் சேதமாக்கப்பட்டுள்ளன. (உ-3)

## தபால் விநியோகம்

சாவகச்சேரி, மார்ச் 24

''மாஹோா'' கப்பலில் 233 பொதிகளில் எடுத்து வரப்பட்ட தபால்களும் தரம் பிரிக்கப்பட்டு நாளை திங்கட்கிழமை முதல் விநியோகிக்கப்படும் என யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-7-173)

## இன்று

தென்மராட்சி, மார்ச் 24

யாழ். றோட்டரிக் கழகமும், பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமமும் இணைந்து மிருசுவில் தவசிகுளம் பகுதியில் உள்ள ஆயிரத்து 500 சிறுவர்களுக்கு பால் வழங்கும் நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு இடம்பெறும். (உ-117)

★ ★ ★

கிளிநொச்சி, மார்ச் 24

கிளிநொச்சி உருத்திரபுரம் அருள்மிகு உருத்திரபுரநாயகி சமேத உருத்திரபுரீஸ்வரர் ஆலய குடமுழுக்கு மண்டல பூர்த்தி பெருவிழா இன்று நண்பகல் 11 மணிக்கு சகஸ்ர சங்காபிஷேகத்துடன் நடைபெறும். (உ-3)

## இலவச கண் சிகிச்சை முகாம்

சாவகச்சேரி, மார்ச் 24

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இலவச கண்சிகிச்சை முகாம் இன்று ஞாயிறு காலை 8 மணி முதல் அம்பன் அரசினர் மருத்துவமனையில் நடைபெறும்.

கண் வைத்திய நிபுணர்களான டாக்டர் கே. யோகரட்ணம், டாக்டர் (திருமதி) அனுசியா சிறீதரன் ஆகியோருடன் பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளையும் இந்த முகாமில் பணிபுரிவார்.

## நாளை

சாவகச்சேரி, மார்ச் 24

கோப்பாய் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 10 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கின்றது. (உ-3)

## மகளிர் அபிவிருத்தி நிலைய நிகழ்வு

சாவகச்சேரி, மார்ச் 24

மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட ஐந்தாவது கருத்தரங்குத் தொடரும் ஜீவாகாரம் வழங்கும் நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை சங்கத்தானையில் நடைபெற்றன.

மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நல்லூர் விக்னேஸ்வரா கல்லூரி அதிபர் திருமதி புஸ்பா சின்னையா, தேசிய இளைஞர் சேவைமன்ற அதிகாரி திரு. எ. சக்திவேல், பொது சுகாதார பரிசோதகர் திரு. எஸ். ரவி ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ)

# 4 லொறி ஆயுதங்களை புலிகளிடம் கையளித்தேன்!

## ராணுவ அதிகாரி சாட்சியம்

கொழும்பு, மார்ச் 24

''முல்லைத்தீவுக் காட்டில் விடுதலைப் புலிகளின் தலைவர்களில் ஒருவரான கப்டன் ஜஸ்ரின் என்பவரிடம் ஆயுதங்களை கையளிக்குமாறு பணிக்கப்பட்டேன்.''

''1989 ஆம் ஆண்டு ஜூலையில் வழங்கப்பட்ட இப்பணிப்புரையின்படி 4 லொறி ஆயுதங்களை கையளித்தேன்.''

முன்னாள் இராணுவ அதிகாரியான லெப்டினன்ட் பத்தேகம ஜெகத் விஸ்வ குமார என்பவர், லெப்டினன்ட் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ மற்றும் அவரது குழுவினரின் மரணம் தொடர்பாக விசாரணை நடத்தும் ஆணைக் குழுவின் முன் கடந்த வியாழனன்று சாட்சியமளிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

ஆர். பிரேமதாஸா ஜனாதிபதியாகக் கடமையாற்றிய காலத்தில் உயர் அதிகாரி ஒருவரின் பணிப்புரைக்கமையதான் இந்த வேலையைச் செய்ததாகவும் —

அச்சமயம் முல்லைத்தீவுக் காட்டுக்கு அருகே வெலிஓயா இராணுவ முகாமில் தான் பணிபுரிந்து கொண்டிருந்ததாகவும் —

அவர் மேலும் தெரிவித்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மாஹோாவில் வாளிகள்

சாவகச்சேரி, மார்ச் 24

இம்முறை பருத்தித்துறைக்கு வந்த 'மாஹோா' கப்பலில் வர்த்தகத் திணைக்களத்துக்கு 300 டசின் கல்வனைஸ்ட் வாளிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இந்த வாளிகள் வர்த்தகத் திணைக்களக் கிளைகள் ஊடாக பாவனையாளர்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் விநியோகிக்கப்பட உள்ளன. (இ-7)

## தமிழீழ வானொலி

ஞாயிறு மாலை

★ 5-00 — ஆரம்பம் — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சி கீதம்
★ 5-10 — அழியாத கோலங்கள்
★ 5-30 — மதுரத்தின் மதுர வேளை
★ 5-45 — உங்கள் தெரிவு
★ 6-00 — புதியவை
★ 6-10 — செய்திகள்
★ 6-15 — உங்கள் தெரிவு
★ 6-30—ஒலிபரப்பு நிறைவு

## புலிகளின்குரல் நிகழ்ச்சி நிரல்

ஞாயிறு இரவு

★ 8-00 —ஆரம்பம்
★ 8-02 — தொடர் நாடகம் (இலங்கை மண்)
★ 8-20 — வரலாறு சொல்லும் பாடம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — அறிவிப்புக்கள் தொடர்ந்து மீண்டும்9-00 மணி வரை தாயகப் பாடல்கள்.

திங்கள் காலை

★ 7-00 — ஆரம்பம்
★ 7-02—மாவீரர் வணக்கம்
★ 7-10 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35—பத்திரிகைச் செய்திகள்
★ 7-45 — அறிவிப்புகளைத் தொடர்ந்து 8-00 மணி வரை தாயகப்பாடல்கள்.

பாடசாலைகளின்

# பழைய மாணவர் சங்க தலைவர் பதவி அதிபருக்கு!

## சுற்று நிருபம் அனுப்பப்பட்டது

சாவகச்சேரி, மார்ச் 24

பாடசாலையின் அதிபரே பதவி வழியாக பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக இருக்க வேண்டும் என்று தெரிவிக்கும் கல்வி அமைச்சின் சுற்று நிருபம் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றது.

இந்தச் சுற்றுநிருபத்துக்கு ஏற்ப பழைய மாணவர் சங்கங்களை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சகல பாடசாலை அதிபர்களும் கேட்கப்பட்டிருப்பதாக கல்வி வலயம் -I இன் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் தெரிவித்தார்.

இச்சுற்று நிருபத்தின்படி— பாடசாலையில் அதிபர் பதவியில் இருப்பவர் அப்பாடசாலையின் பழைய மாணவராக இருந்தாலும், இல்லாவிட்டாலும் அப்பாடசாலை பழைய மாணவர் சங்கத்துக்கு பதவி வழியாக அவரே தலைவராக இருப்பார்; பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் எந்தக் கொடுப்பனவுக்கும் கையொப்பமிடுபவராகவும் அவர் இருக்க வேண்டும்.

இந்த முக்கிய அம்சங்கள் இரண்டையும் கவனத்தில் கொண்டு —

பாடசாலை பழைய மாணவர் சங்கங்களை அழைத்து, இந்த இரு மாற்றங்களையும் செய்யக்கூடியதான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அதிபர்கள் கேட்கப்பட்டிருப்பதாக கல்விப் பணிப்பாளர் மேலும் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம் பெயர்ந்த திவக மக்கள் நலன் காக்கும் கழகம்

## பொதுக்கூட்டம்

காலம்:- 25-03-96 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணி
இடம்:- டிறிபேக் கல்லூரி மண்டபம், சாவகச்சேரி

### நிகழ்ச்சி நிரல்

01. மௌன அஞ்சலி
02. தலைமையுரை
03. சென்ற பொதுக்கூட்ட அறிக்கை வாசித்தல்
04. கணக்கு அறிக்கை சமர்ப்பித்தல்
05. புதிய நிர்வாகம் தெரிவு
06. பிற விடயங்கள்
07. நன்றியுரை

மேற்படி கழகத்தின் அங்கத்தவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி.

தலைவர். செயலாளர்.

குறிப்பு:- வன்னிப் பெருநிலப்பரப்பிலுள்ள அங்கத்தவர்கள், இரணைமடுச் சந்திக்கு அருகாமையிலுள்ள ராங்வியூ ஹோட்டல் என்னும் முகவரியில் இன்று காலை 11.00 மணிக்கு முன்னர் வருகை தந்து தங்கள் பயண ஒழுங்குகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

(41082)

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளைத் தலைமையகம்

இடம்பெயர்ந்த, செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின், உதவி அரசாங்க அதிபர் பிரிவுக் காரியாலயங்களின் தற்போதைய முகவரிகள்:

நெடுந்தீவு:
''திரு. ஜி. எம். செபஸ்ரியாம்பிள்ளை இல்லம்'' கச்சாய் வீதி, கொடிகாமம்.

ஊர்காவற்றுறை:
''திரு. சோ. விக்னேஸ்வரன் இல்லம்'' படித்த, மகளிர் குடியேற்றத்திட்டம், பாம் றோட், மிருசுவில்.

வேலணை:
''திரு. எஸ். கோபாலகுலசிங்கம் இல்லம்'', இல்வாரை வீதி, மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.

சங்கானை:
''திரு. சி. அண்ணாமலை இல்லம்'', 190ஆம் கட்டை, கணேசன் (வில்லி) வீதி, நுணாவில் தெற்கு, சாவகச்சேரி.

சண்டிலிப்பாய்:
''திரு. இ. வன்னியசிங்கம் இல்லம்'', கோயிலாக் கண்டி, கைதடி தெற்கு, நாவற்குழி.

தெல்லிப்பளை:
''திரு. இ. சிவராஜா இல்லம்'', பெருங்குளம் சந்தி, சாவகச்சேரி.

உடுவில்:
''திரு. எஸ். சிவக்கொழுந்து இல்லம்'', கோவிந்த பிள்ளை ஒழுங்கை, ஆத்தியடி, பருத்தித்துறை.

யாழ்ப்பாணம்:
இல. 16, கந்தையா ஒழுங்கை, சாவகச்சேரி.

கோப்பாய்:
''மெடி எயிட்ஸ்'', பிரதான வீதி, சாவகச்சேரி.

நல்லூர்:
''ஆனந்தகொட்'', கதிரவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டி, பருத்தித்துறை.

உறுப்பினர்கள், தொண்டர்கள் தமது பிரிவுத் தலைவர் / செயலாளருடன் உடனே தொடர்பு கொண்டு தம்மை சேவையில் ஈடுபடுத்தும்படி வேண்டப்படுகின்றார்கள்.

கௌரவ செயலாளர்.

வி. எம். றோட்,
பருத்தித்துறை, 22-3-1996. (சி-4135)

# 31-ம் நாள் நினைவலைகள்

## வி. சுதாசங்கர்

(உடுவில் றோட், மானிப்பாய்.)

(மறைவு:- 23 - 02 - 96)

நானிலத்தில் நடந்து வந்தாய்
நடத்துனராய் நிமிர்ந்து நின்றாய்
நின்குடும்பம் நீர் வடிக்க
நிர்க்கதியாய் - நீ மறைந்தாய்.

இன்றைய தினம் (24 - 03 - 1996) தற்காலிக முகவரியில் அமைந்துள்ள உவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

சிற்றூர்த்திச் சேவை
சங்கங்களின் இணையம்,
யாழ். மாவட்டம்.

தற்காலிக முகவரி:-
புத்தூர் சந்தி,
சாவகச்சேரி. (41215)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 24-03-96 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# கிளிநொச்சி நகரில் சுறுசுறுப்பாக செயற்பாடு

கிளிநொச்சி, மார்ச் 24

கிளிநொச்சி நகரப்பகுதியில் தனியார் கல்வி நிறுவனங்கள் சுறுசுறுப்பாக இயங்குவதை காணக்கூடியதாக உள்ளது.

வலிகாமத்தில் இயங்கி வந்த பிரபல தனியார் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் இப்பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சை அண்மித்து வருவதனைத் தொடர்ந்து இக் கல்வி நிறுவனங்கள் தமது செயல்பாடுகளை இப் பகுதிகளில் விரிவுபடுத்தியுள்ளன.

பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் இக் கல்வி நிறுவனங்களில் சேர்ந்து பரீட்சைக்காகத் தம்மை ஆயத்தப் படுத்திவருகின்றனர்.

(இ-124)

# வன்னியில் விவசாய கடன் நிறுத்தம்

வன்னி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு கடன் வழங்குவதை மக்கள் வங்கி இவ் வருடம் நிறுத்தியுள்ளது என்று வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் மக்கள் வங்கியால் வழங்கப்பட்ட கடன்கள் பெரும்பாலான விவசாயிகளால் மீளச் செலுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## காப்புறுதி..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீயினாலேயே ஏனையவை அழிந்தன. எனவே ஏனைய குதங்களுக்கான காப்புறுதி நஷ்டஈடு வழங்கப்படவேண்டும். தவறினால் அந்தக் காப்புறுதி நிறுவனத்துக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்வோம்,' — என்று பெற்றோலிய கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-10)

## வாந்தாறுமூலை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பித்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கையில் புலிகள் இத் துணிகரத் தாக்குதலை நடத்தியிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

கடந்த இரு வாரங்களுக்குள் புலிகள் நடத்திய தாக்குதல்களில் நூறு படையினர் வரை உயிரிழந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-3-6-7)

## 4 லொறி...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

இரண்டாயிரம் ஏ. கே. ரைபிள்கள், 50 ஆயிரம் கிரனேட்டுக்கள், ஐநூறு ரூபா நோட்டுக்களைக் கொண்ட பல கட்டுகள் உட்பட நான்கு லொறி நிறைய ஆயுதங்கள் மற்றும் பொருள்களை தாம் புலிகளிடம் கையளித்ததாகவும் —

இந்த விடயங்கள் குறித்து தாம் ஒரு சாட்சியாக இருப்பதால் தமது உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (உ-3)

## மரண அறிவித்தல்

திருமதி
### ஞானமுத்து பெனடிற்றம்மா

மயிலிட்டி பிராயடியைச் சேர்ந்த திருமதி ஞானமுத்து பெனடிற்றம்மா 23-03-96 இல் சரசாலைபில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 24-03-96 காலை 10 மணிக்கு நடைபெறும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

தகவல்:
ஞா. எட்வேட்
[மகன்]
அல்வாய் வடக்கு,
சரசாலை... (40377)

## ஒரு மூழ.. ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யின் போது உயிரிழந்தார் என்றும் —

ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாக தூரதர்ஷன் குறிப்பிட்டது. (உ)

# தேடப்படுகிறார்

பண்டத்தரிப்பைச் சேர்ந்த, பேரம்பலம் கணக்காய்வு நிறுவனத்தில் வேலை செய்த திரு. C. செல்வரத்தினத்தை

திரு. S. பாலாபரணம் சாவகச்சேரி ஸ்ரேசன் வீதியில் அமைந்துள்ள பெண்கள் இல்லத்தில் திங்கள் / செவ்வாய் / புதன் ஆகிய தினங்களில் காலை 9-00 — 12-00க்கும் இடையில் சந்திக்க விரும்புகிறார்.

(41086) S. பாலாபரணம்

# மரண அறிவித்தல்கள்

## வைத்திய கலாநிதி சிவஞானம் குமரகுருநாதன்

(இணுவில் மேற்கு - மஸ்கெலியா)

நாயன்மார்க்கட்டைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கு 'பழமுதிர்ச்சோலை'யை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. சி. குமரகுருநாதன் மஸ்கெலியாவில் 18-03-1996 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான சிவஞானம் - தங்கம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான கந்தையா – பாக்கியத்தின் அன்பு மருமகனும், புனிதவதியின் அன்புக் கணவரும், சந்திரகுமார் (யாழ்/ மருத்துவபீடம்), தனவநதி (யாழ்/ மருத்துவபீடம்), செல்வந்தி (யாழ்/ விஞ்ஞானபீடம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகரட்ணம் (வைத்திய கலாநிதி உரும்பிராய்), சுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற சிறைச்சாலை அதிகாரி – நுணாவில் சந்தி) காலஞ்சென்ற மயில்வாகனம் (மக்கள் வங்கி - நாயன்மார்கட்டு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், விவேகானந்தனின் (லண்டன்) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23-03-1996 பி.ப. 2.00 மணிக்கு மஸ்கெலியாவில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
திருமதி. இ. சுப்பிரமணியம்
வீரக்கொடியன் ஒழுங்கை,
நுணாவில் சந்தி,
சாவகச்சேரி. (41216)

## திருமதி ஐயாத்துரை சின்னம்மா

கல்வியங்காடு விளையாட்டரங்கு வீதியைச் சேர்ந்த ஐயாத்துரை சின்னம்மா 22 - 03 - 96 இல் காலமானார்.

அன்னார் வைரவநாதன், வேலாயுதபிள்ளை, அரசபிள்ளை, அன்னமுத்து, இராசம்மா, காலஞ்சென்ற இராசமணி ஆகியோரின் அன்புத் தாயாரும், பரராஜசிங்கம், சத்தியசீலன், வன்னியசிங்கம், சந்திராதேவி, சூரியகுமாரி, சிவபாக்கியம் ஆகியோரின் மாமியாரும், நடனசிகாமணி, வரதராஜன், சதீஸ், செல்வராணி, சசிகுமார், கண்ணன், ஈசன், சுகந்தி, சுதன், இராசலிங்கம், விசயன், சின்னாம்பி, விஜயமலர், வசந்தி, சிவகுமார், நந்தகுமார், அம்பிகை, கமலதாசன், கல்யாணி, அரவிந்தன் ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமச்சடங்கு கரவெட்டி சோனப்பு மயானத்தில் 23 - 03 - 96 இல் இடம்பெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஐ. அரசபிள்ளை
(மகன்)

த. முகவரி:-
ஐயாத்துரை (மாஸ்ரர்),
சாமியன் அரசடி,
கரவெட்டி. (40378)

## திருமதி தங்கமுத்து செல்லர்

கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும், தற்போது சாவகச்சேரியில் வசித்தவருமாகிய திருமதி செ. தங்கமுத்து நேற்று (23-3-96) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லரின் அன்பு மனைவியும், பூமணி, சின்னமனி (கனடா), இராமணி, காலஞ்சென்ற சிவபாதம், சற்குணம் (லொறி உரிமையாளர்), வீரசிங்கம் (கிருஷ்ணா தச்சுத் தொழிற்சாலை, இணுவில்), இராசதுரை (ஜேர்மனி), மனோன்மணி, ஆனந்தராசா (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், முத்துராசா மற்றும் பொன்ராசா, புஷ்பராணி, பூமணி, ராணி, திலகவதி, இராஜேஸ்வரி, விமல்சந்திரன் (ஜேர்மனி), ரோசாராணி (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-3-96) காலை 10 மணியளவில் சாவகச்சேரி இந்து மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. சற்குணம்
(மகன்)

தற்போதையமுகவரி: கே. கே. எஸ்.றோட், கோண்டாவில் மேற்கு
சாவகச்சேரி மகளிர் கல்லூரி முன்பாக (41092)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org